## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.

## அ.வ.எண்.223/2016

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி. K. அம்பிகா, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி 1 வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2020 ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 10.03.2020**

**பெயர் - கொள்ளாபுரி**

**க/பெ - காட்டையன்**

**வயது -**

**சாட்சி - PW1**

**விசாரணை தொடங்கும் நேரம் -01.02pm**

**குறுக்கு விசாரணை -**

எனக்கு 70 வயது இருக்கும். நான் ஞாயிறு கிராமத்தில் வசித்து வருகிறேன். மற்ற வாதிகள் என் தங்கைகள். என் தந்தை முனுசாமி உடன் பிறந்தவர்கள் 4 பேர். அதில் முதலில் பிறந்தவர் கொண்டி என்கிற நைனான், 2வது செல்லன், 3வது வெள்ளைக்கான் என்கிற வெள்ளை, 4வது என் தந்தை. செல்லனுக்கு வேறு பெயர் இல்லை. முனுசாமிக்கும் ஒரே பெயர் தான். என் தாத்தா பாட்டி பெயர் தெரியாது. எனக்கு 10 வயதில் திருமணம் நடந்தது. ஞாயிறு கிராமத்தில் என்னை திருமணம் செய்து வைத்தனர். என் கணவருக்கு விவசாய நிலங்கள் ஞாயிறு கிராமத்தில் உள்ளது. சுமார் 2 ஏக்கர் சொந்தமாக இருந்தது, பாய் வீட்டு நிலம் 5 ஏக்கர் குத்தகைக்கு பயிர் செய்தோம். அந்த ஊரில் ஞாயிறு ஏரி உள்ளது. சொந்தமாக போர் போட்டு கிணறு வெட்டி 2 போகம் பயிர் செய்துவந்தோம். என் கடைசி தங்கைக்கு எனக்கு 4 குழந்தைகள் பிறந்த பிறகுதான் திருமணம் ஆனது. வர்த்தனம் என்னும் கிராமத்திற்கு முன் உள்ள கொள்ளுமேடு கிராமத்தில் திருமணம் ஆனது. 2ம் வாதியை கவரப்பேட்டை அடுத்த

கீழ் முதலம்பேடு கிராமத்தில் திருமணம் செய்து கொடுத்தனர். என் தந்தை மற்றும் அவரது சகோதரர்களுக்குள் எப்போது பாகப்பிரிவினை நடந்தது என்று எனக்கு தெரியாது. என் தந்தை எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. என் தந்தை இறந்து 2 மாதம் கழித்துதான் தெரியவந்தது. அப்போது நான் மருத்துவமனையில் இருந்தேன். எனக்கு 5 பெண் பிள்ளைகள், 4 ஆண் குழந்தைகள். தற்போது எனக்கு ஞாயிறு கிராமத்தில் வீட்டு மனை, மெத்தை வீடு, பாய் வீட்டு நிலம் உள்ளது. பாய் வீட்டிற்கு குத்தகையாக 7 மூட்டை தருகிறோம். ஆரோன் பாய், எ.கே. பாய், மற்றும் அமான் பாய். ஞாயிறு கிராமத்தில் உள்ள சொத்துக்களை விற்றபிறகு என் தாய் வீட்டுசொத்தை விற்க வழக்கு கிராமத்திற்கு வந்தோம். எங்கள் சொத்திற்கு பத்திரம், மற்றும் பான்டு உள்ளது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். சில என்னிடம் உள்ளது அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வேன்.

**விசாரணை முடியும் நேரம் -01.22pm**